S. Ranthas.

# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2015

| தரம் : 06 | வரலாறு<br>பெயர் / சுட்டெண் : ............................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
| --- | --- | --- |

## பகுதி - I

**சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

01. வரலாற்றின் தந்தை என அழைக்கப்படும் ஹெரடோரஸ்ஸின் தாய்நாடு
1) கிரேக்கம் 2) உரோம்
3) இத்தாலி 4) இந்தியா

02. இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் காலத்தால் முந்திய நூல்
1) மகாவம்சம் 2) தீபவம்சம்
3) சூளவம்சம் 4) கர்ணபரம்பரைக் கதை

03. மகா வம்சத்தை எழுதியவர்
1) பராக்கிரம பாகு 2) மகாராம தேரர்
3) விக்கிரமபாகு 4) ஸ்ரீசுமங்கலதேரர்

04. முகம்மது நபி அவர்கள் மக்காவை விட்டு மதீனாவுக்கு சென்ற ஆண்டு
1) ஹிஜ்ரி ஆண்டு 2) வள்ளுவர் ஆண்டு
3) புத்த வருடம் 4) சாலிவாகன சகாப்தம்

05. பூமி தோன்றிய தூசிப்படலத்தின் பெயர்
1) நிகாரிகா 2) லாவா
3) ஒப்பீனியா 4) புரோகாயோட்

06. உலகில் தாவரங்கள் தோன்றிய யுகம்
1) சிலூரியன் யுகம் 2) பெருப்பனி யுகம்
3) பெலியோசொயி யுகம் 4) கலி யுகம்

07. முதன்முதலில் நெருப்பை உபயோகித்த மனித இனம்
1) ஒஸ்ரலோபிதிகஸ் 2) ஹோமேஹெபிலஸ்
3) ஹோமோ இரக்டஸ் 4) ஹோமோ நியண்டதாலன்சிஸ்

08. எலும்புக் கூடுகளுக்கு வர்ணம் பூசிய மனிதன் வாழ்ந்த காலம்
1) பழைய கற்காலம் 2) இடைக் கற்காலம்
3) புதிய கற்காலம் 4) நவீன காலம்

09. உலகில் முதன்முதலில் நெல் பயிரிடப்பட்ட நாடு
1) இந்தியா 2) சீனா
3) மெக்சிக்கோ 4) இலங்கை



kalvi.lk

10. மணி, நிமிடம், செக்கன் என்பவற்றைக் கணக்கிட்டு உலகிற்கு வழங்கிய நாகரிகம்
   1) மொசப்பத்தேமியா 2) எகிப்து
   3) சிந்துநதி 4) சீனா

11. மொசப்பத்தேமியா நாகரிகத்தில் பூமிக்கு அதிபதியாக வணங்கப்பட்ட கடவுள்
   1) அனு 2) என்கிகி
   3) என்லிலி 4) சிகுராத்

12. பிரமிட்டுக்களுக்குப் பெயர் போன நாகரிகம்
   1) சிந்துநதி நாகரிகம் 2) மொசப்பத்தேமியா நாகரிகம்
   3) எகிப்திய நாகரிகம் 4) சீன நாகரிகம்

13. விஜயனும் குழுவினரும் இலங்கையில் வந்திறங்கிய இடம்
   1) உராந்தோட்ட 2) மகாதித்த
   3) தம்பபன்னி 4) கோகர்ண

14. அனுராத என்ற அமைச்சனால் அமைக்கப்பட்ட குடியிருப்பு
   1) உபதிஸ்ஸகம 2) அனுராதகம
   3) உருவெலகம 4) திகாயுகம

15. அனுராதபுரத்தை தலைநகராக்கிய மன்னன்
   1) விஜயன் 2) பண்டுகாபயன்
   3) தேவநம்பியதீசன் 4) வசபன்

16. பண்டுகாபய மன்னனால் அமைக்கப்பட்ட குளம்
   1) அபயவாவி 2) மின்னேரியா
   3) பராக்கிரம சமுத்திரம் 4) திஸ்ஸவாவி

17. இலங்கைக்கு பௌத்த மதம் கொண்டு வரப்பட்டது
   1) மூத்த சிவன் 2) தீசகாமினி
   3) தேவநம்பியதீசன் 4) பண்டுகாபயன்
   காலத்திலாகும்.

18. இலங்கையில் முதலாவது தூபி
   1) வட்டதாகே 2) தூபராம
   3) ரூவான் வெலிசாயா 4) அபயகிரி

19. இலங்கைக்கு புனித வெள்ளரசு மரக்கிளையைக் கொண்டு வந்தவர்
   1) பிக்குணி சங்கமித்தை 2) பிக்குணி அனுலாதேவி
   3) மகிந்ததேரர் 4) அசோகன்

20. இலங்கையில் பிக்குணி சாசனம் ஆரம்பமானது
   1) அனுலாதேவி பிக்குணியானதன் மூலம்
   2) சங்கமித்தை பிக்குணியானதன் மூலம்
   3) அரிட்டன் பிக்குவானதன் மூலம்
   4) தேவநம்பியதீசன் பௌத்த மதத்தைத் தழுவியதன் மூலம்

(20 x 2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II


**முதலாம் வினா கட்டாயமானது. முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாகளுக்கு விடை தருக.**

01. அ) 1) நீர் இத் தவணையில் வரலாற்றுப் பாடத்தில் செய்த கணிப்பீட்டு வகைகள் இரண்டு தருக.

2) இக் கணிப்பீட்டிற்கு நீர் பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் மூன்று தருக.

3) இக் கணிப்பீட்டினால் நீர் அடைந்த நன்மைகள் இரண்டு தருக.

ஆ) தரப்பட்டள்ள இலங்கைப் படத்தினைக் கொண்டு அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.






kalvi.lk

1) விஜயனும் குழுவினரும் வந்திறங்கிய இடத்தைக் குறிக்கும் எழுத்து.

2) உருவெலகம குடியேற்றத்தைக் குறிக்கும் எழுத்து

3) அனுராதபுரத்தைக் குறிக்கும் எழுத்து

4) மல்வத்து ஓயாவைக் குறிக்கும் எழுத்து

5) 'பாஹியன்கல' குகையைக் குறிக்கும் எழுத்து

6) சங்கமித்தை வந்திறங்கிய இடத்தைக் குறிக்கும் எழுத்து

02. 1) மூலாதாரம் என்றால் என்ன? அவற்றின் வகைகள் எவை?

2) இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் மூலாதாரங்கள் நான்கின் பெயர் தருக.

3) வரலாற்றுக் காலத்தை அளவிடும் முறைகள் ஐந்து தருக.

03. 1) உலகில் முதலில் தோன்றிய பக்றீரியா எது?

2) மானிட பரிணாமம் என்றால் என்ன?

3) மனிதனின் ஐந்து வகையான கூர்ப்புக் கட்டங்களையும் தருக.

04. 1) மனிதனின் கலாசார வளர்ச்சியின் மூன்று கட்டங்களும் எவை?

2) புதிய கற்காலத்தில் மனித வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் நான்கு தருக.

3) முக அமைப்புக்கேற்ப மனித இனம் வகைப்படுத்தப்படும் முறைகளைத் தருக.

05. 1) நாகரிகம் என்பதனுள் அடங்கும் விடயங்கள் மூன்று தருக.

2) புராதன நாரிகங்கள் நான்கு தருக.

3) மொசப்பத்தேமிய நாகரிகப் பிரதேசத்தில் சமூகத்தில் காணப்பட்ட பிரிவுகள் எவை?

06. 1) இலங்கைக்கு வந்த முதலாவது ஆரியர் குழு எது?

2) இலங்கையில் புராதன காலத்தில் இயக்கர்கள் வாழ்ந்த இரு நகரங்களைத் தருக.

3) விஜயனுடைய குழுவினரால் அமைக்கப்பட்ட குடியேற்றங்கள் நான்கு தருக.

07. 1) எமது நாட்டை ஆண்ட சிறந்த மன்னர்கள் மூவரின் பெயர்களைத் தருக.

2) தேவநம்பியதீச மன்னனால் அமைக்கப்பட்ட சமயக் கட்டிடங்கள் நான்கு தருக.

3) பௌத்த மதத்தின் வருகை காரணமாக ஏற்பட்ட மாற்றங்கள் ஐந்து தருக.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**
**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினுாடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page